உதவி அமர்வு/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
ஐ.ஏ.எண்.369/2017ஒஎஸ்எண் 100/2017

| | | |
|---|---|---|
| பெயர் | .. | கே.ராமச்சந்திரன்(எ.மசா1) |
| த/பெ. க./பெ. | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

*1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.*
***29/10/2018***

முதல் விசாரணை

எனது பெயர் ராமச்சந்திரன். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்த பிரதான வழக்கில் எதிர்மனுதாரர் ஆவேன். நான், எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

| | | |
|---|---|---|
| எமசாஆ1 | 25.20.18 | எதிர்மனுதார் பெயரில் துாத்துக்குடி பாரதஸ்டேட் வங்கியில் பராமரிக்கப்படும் சேமிப்பு வங்கி கணக்கிற்கான பாஸ்புத்தகம்.(அசலுடன் ஒப்பிடப்பட்டது) (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) |
| எமசாஆ.2 | 17.06.17 | உபய மனுதார்களின் மூத்த மகனான மணிகண்டனின் மனைவி திருமதி.சங்கீதா, மனுதார் மற்றும் எதிர்மனுதாரின் மகளான திருமதி.ஜனனி சங்கரி ஆகியோரால் தாக்கப்பட்டு காயம்பட்ட செல்போனிலிருந்து எடுக்கப்பட்ட முகத்துடனான போட்டோ மற்றும் மேற்படி போட்டோவை பிரிண்ட் செய்தமைக்கான 30.06.17 தேதிய அசல் பில்லுடன். (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) |

எமசாஆ.3- - திருமதி சங்கீதாவின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

எமசாஆ.4 04.10.17

20.10.17 எதிர்மனுதார் காலில் அடிபட்டு எலும்புமுறிவு ஏற்பட்ட வகைக்கு துாத்துக்குடி மருத்துவரிடம் பெற்ற சிகிச்சை குறிப்பு (மருத்துவசான்றுடன்) அசல். (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

எமசாஆ.5 11.10.18 எதிர்மனுதார் மனுதார்மீது கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வாழ்க்கை மீட்டளிப்பு கோரும் மனு எச்எம்ஓபி எண்.225/2018 அலுவலக நகல்.

கு.வி.

மனுதாரர் எனது மனைவி. எனக்கும் 'மனுதாருக்கும் நடைபெற்ற திருமணம் தற்போதுவரை ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது என்றால்சரிதான். நான் சுங்கஇலாகாவில் பணியாற்றி ஒய்வுபெற்றுள்ளேன். நான் பணிஒய்வு பெறும்போது மாதம் ரூ.52,000/- சம்பளமாக பெற்றுவந்தேன். நான் தற்போது ஓய்வுஊதியமாக மாதம் ரூ.15,477/-பெற்று வருகிறேன். என்னிடம் காட்டப்படும் மசாஆ.6ன்படி பணிஒய்வு பலன்கள் பெற்றுள்ளேன் ன்றால்சரிதான். எமசாஆ1 பார்வையிடும் போது 25.10.18அன்றுதான் புதிய பாஸ்புக் பெற்றுள்ளேன் என்றால்சரிதான். அந்த ஆவணத்தில் 19.7.18முதல் 10.10.18வரை உள்ள வரவுசெலவு துலங்கிறது என்றால்சரிதான். மேற்படி தேதிகளுக்குமுன்பாக உள்ள பற்றுவரவுசெலவுகளை காட்டக்கூடிய பாஸ்புக் என்னிடம் உள்ளது என்றால்சரிதான். நான் சம்பளம்பெற்றதும், மற்றும் ஒய்வுபெற்றதும் ஒரே வங்கி கணக்கு என்றால்சரிதான். சம்பளம் மற்றும் ஒய்வுஊதியத்தை பாரத ஸ்டேட் 'வங்கி துாத்துக்குடி (எஸ்எம்இ) கிளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எமசாஆ.2 போட்டோவை யார்எடுத்தது என்று எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் துலங்காது என்றால்சரிதான். ஆனால் ரசீது மட்டும் 30.6.17 அன்று கோவில்பட்டி கௌதம் கம்யூட்டர் கலர்லேட் ரசீது பெறப்பட்டுள்ளதாக துலங்கிறது என்றால்சரிதான். எமசாஆ.2 நிரூபிக்கக்கூடிய போட்டோவோ போட்டோக்களின் சிடி தாக்கல்செய்யாத காரணத்தால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றுசொன்னால் சரியல்ல. எமசாஆ.5

ஆவணம் சமூகம் நீதிமன்றத்தில் 11.10.18தான் தாக்கல்செய்துள்ளதாக துலங்கிறது என்றால்சரிதான். ஏழாயிரம்பண்ணை கிராமம் ஊத்துப்பட்டிபஞ்சாயத்து கிராமத்தில் எனக்குபாத்தியப்பட்ட இடம் மற்றும் வீடுகள் இருந்ததா? என்றால் முன்பு என்பெயரில் இருந்தது. 13.7.1997ல் மணிஎன்பவரிடமிருந்து ஊத்துபட்டி சர்வே எண்.80/2ல் சுமார் 5செண்ட் இடத்தை நான் கிரையம்பெற்றேன் என்றால்சரிதான். அந்த இடத்தில்தான் நான் வீடு கட்டியுள்ளேன். கதவு எண்.2/293ஆகும். 4.10.07 சர்வே எண்.80/2-ல்பிளாட் எண்33,34,35,36 பிளாட்டுகளை கண்ணாயிரம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால்சரிதான். அதனுடைய மொத்த விஸ்தீரணம் சுமராக 15-1/2செண்ட் என்றால் சுமார் 15செண்ட் வரும்.

தொடர்ச்சிக்காக வாய்தா வேறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.